2002 ஏப்ரல் 1]

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முதியோர் உதவித் தொகையைப் பெற்று வந்தவர்களுக்கு கடந்த கால ஆட்சியில் ஜனவரி மாதத்திலிருந்து திடீரென்று நிறுத்தி விட்டார்கள். ஏற்கெனவே முதியோர் உதவித் தொகையைப் பெற்று வந்தவர்களுக்கு, திடீரென்று நிறுத்துகின்றபொழுது, என்ன காரணத்திற்காக அந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டது என்று அறிவிக்கவேண்டுமென்று விதிமுறை இருக்கிறதா? தகுதி படைத்தவர்களுக்கு முதியோர் உதவித் தொகையை வழங்காமல் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாக நடந்துகொள்கின்ற அந்த அதிகாரிகளின்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை தருவதற்காகவே சில தகுதிகளை அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. தொழுநோயாளிகள், மனநோயாளிகள், பார்வையற்றோர், பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டவர்கள், அவயம் இழந்தவர்கள் ஆகியோருக்கு மட்டும் வயது வரம்பு 60 ஆகும். இதர முதியோர்களுக்கு வயது வரம்பு 65. மிகவும் முதியவராகத் தோற்றம் உள்ளவர்களுக்குச் சான்றிதழ் தேவையில்லை. இது அரசின் உதவித் தொகை வழங்கப்படுகிறவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற தகுதிகளாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற குற்றச்சாட்டின்படி தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அரசினுடைய கவனத்திற்குத் தகவல்கள் எதுவுமில்லையென்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52. திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

52—

சொகுசுப் பேருந்துகள்

***6478—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளைப் போன்று அரசு சொகுசுப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

[2002 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தமட்டில் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்ற சாதாரண பேருந்துகளை, படிப்படியாக மாற்றி மிதவை, சொகுசு படக்காட்சியுடன்கூடிய பேருந்துகளாக இயக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி இருக்கின்ற திசைநோக்கி, அவர் மலர்ப்பாதம் பணிந்து வினாவைத் தொடுக்கின்றேன். அரசு சார்பில் சென்னையிலிருந்து சொகுசுப் பேருந்துகள் மற்றும் மிதவைப் பேருந்துகள் எத்தனை இயக்கப்படுகின்றன? அப்படி இயக்கப்படுகின்ற சொகுசுப் பேருந்துகளில் உதாரணத்திற்கு சென்னையிலிருந்து திருச்சி செல்லும் தனியார் பேருந்துகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது, அரசுப் பேருந்துகளில் எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக மொத்தமுள்ள 903 பேருந்துகளில் சாதாரண பேருந்துகளாக 351 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சொகுசுப் பேருந்துகள் 304 இயக்கப்படுகின்றன. படக்காட்சியுடன்கூடிய சொகுசுப் பேருந்துகள் 238 இயக்கப்படுகின்றன. ஏர் பஸ் என்று சொல்லப்படுகின்ற மிதவைப் பேருந்துகள் 10 இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு சொகுசுப் பேருந்திற்கும், தனியார் பேருந்திற்கும் உள்ள கட்டண வேறுபாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், திருச்சியிலிருந்து சென்னைக்கு அல்லது சென்னையிலிருந்து திருச்சிக்கு தனியார் பேருந்துகள் சொகுசுப் பேருந்துகளுக்கு ரூ. 220 முதல் சமயம்போல, கூட்டத்திற்குத் தகுந்தாற்போல கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால், அரசுப் பேருந்திற்கு ரூபாய் 145 மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. அதேபோல, சொகுசுப் பேருந்துகளுக்கும், அரசுத் துறையின் சார்பாக 38 பைசாவும், சாதாரண பேருந்துகளுக்கு 32 பைசாவும், மிதவைப் பேருந்துகளுக்கு மட்டும் 45 பைசாவும் கிலோமீட்டருக்கு என்ற விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002 ஏப்ரல் 1]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளைவிட தனியார் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்ற நிலையிருந்தும், தனியார் பேருந்துகளில்தான் மக்கள் அதிகமாகப் பயணம் செய்யும் நிலை இருக்கிறது. தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளில் குறைவான கட்டணம் இருந்தும் மக்கள் அதிகமான அளவில் பயணம் செய்யாத நிலையினை அரசு அறியுமா? இந்தக் குறையினைப் போக்க அரசு முயற்சிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளில் கட்டணம் குறைவாக இருந்தும், வருவாய் குறைவாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட குறைபாடுகள் கடந்த காலங்களிலே இருந்தன என்பது உண்மைதான். இப்பொழுது அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் நீக்கிட வேண்டும் என்று நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்பேரில், இப்போது பல்வேறு சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்து அப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் களைந்து தரமான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலமாகக் கூடுதல் வருவாயைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்தைவிட தனியார் பேருந்துகளில் அதிகமான பயணிகள் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் பேருந்துகளைவிட அரசுப் பேருந்துகளிலே அதிகமான பயணிகளை அபகரித்துக்கொண்டு, அந்தப் பேருந்தை இலாபகரமாக நடத்துவதற்கு கடினமாக உழைத்துக் கொண்டிருந்த ஏறத்தாழ ஆயிரத்திற்கு அதிகமான ஊழியர்களை, அவர்கள் போனஸ் கேட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் வெளியிலே நிறுத்தப்பட்டதன் காரணமாகத்தான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக்கேள்விக்குத் தொடர்பற்றது. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]